## இசைதான் அனைவரையும் மெய் சிலிர்க்க வைக்கும்! நெஞ்சுருக வைக்கும்! அந்த

# இசையைக் கூட வெல்லும் சக்தி கலைஞருக்கு மட்டுமே உண்டு!

## தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற விழாவில் - அமைச்சர் கோவி.செழியன் பெருமிதம்!

சென்னை, நவ. 8 -

**“இசைதான் அனைவரையும் மெய் சிலிர்க்க வைக்கும், நெஞ்சுருக வைக்கும். அந்த இசையை வெல்லும் சக்தி தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு மட்டுமே உண்டு” என்று உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் பெருமிதத்துடன் கூறினார்.**

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நடத்தும் ” இசை, நாட்டிய, நாடக, கிராமியக் கலை விழா” நடைபெற்றது.

இவ்விழாவில் உயர்க்கல்வி துறை அமைச்சர் கோவி.செழியன் பேசியதாவது:

ஒரு நிகழ்ச்சி நடத்துவது என்பது எவ்வளவு கடினம் என்பதை அமைச்சராக இருக்கிர நானே உணர்வேன். ஆனால் அருமை சகோதரியார் விஜய் தாயன்பன் அவர்கள் ஏழு நாள் நிகழ்ச்சி ஏழு நாளும் ஏழு மாண்புமிகு அமைச்சர்களை வரவைத்த பெருமை இந்த தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு மட்டுமே உண்டு.

ஒரு நாள் என்றால் ஒரு அமைச்சர் வரலாம். மறு நாள் என்றால் மறு அமைச்சர் வரலாம். மீண்டும் அழைத்தால் இன்னும் ஒரு அமைச்சர் வரலாம். அது எந்த சபையாக இருந்தாலும் எந்த மன்றமாக இருந்தாலும் எந்த அரங்கமாக இருந்தாலும், நான் அறிந்தவரை தெரிந்தவரை பார்த்தவரை படித்தவரை புரிந்தவரை ஏழு அமைச்சர்களை வரவழைத்த ஒரே மன்றம் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம். அதற்கு மொத்த பெருமை அருமை சகோதரியார் விஜயாதாயன்பனுக்கு மட்டுமே.

ஒரு நாலரை மணி இருக்கும், அலைபேசி வந்தது. “அம்மா… சொல்லுங்க அம்மா” என்றேன். “செழியா, எத்தனை மணிக்கு உனக்கு பிளைட்” என்றார். அய்யய்யோ செழியா என்று சொல்லிவிட்டேனே என்று அடுத்த வார்த்தையே சொடுக்கு போட்டுக் கொண்டார். நான் சொன்னேன், “செழியா” என்று உரிமையோடு அழைக்கும் அந்த தாய் குணம் திராவிட முன்னேற்ற கழகத்தில் எந்த தொண்டனுக்கு கிடைக்கும்.

இந்த தொண்டனுக்கு உங்கள் திருவாயால் என்றால் அதுதான் திராவிட மடல் ஆட்சியின் சாதனை. நான் யார்? எந்த குலம்? எந்த இனம்? என் தாய் யார்? என் தந்தை யார்? என் பின்புலம் என்ன? ஜாதி என்ன? பணம் என்ன? படிப்பு என்ன? ‘நெவர்’. கருப்புசிவப்பு வேட்டி கட்டிய தொண்டனை, “தம்பி, எத்தனை மணிக்கு பிளைட்” என்று என்னுடைய அக்கா விஜயா தாயன்பன் கேட்டால், இதை விட திராவிட மாடலுக்கு வேறு என்ன சாட்சி வேண்டும்.

### இசை ஆளுமை குடி கொண்டிருக்கிறது!

ஒரு இசை ஆளுமை இங்கு குடி கொண்டிருக்கிறது. ஒவ்வொருவரை பார்த்தால், அவரைப் பார்க்க வேண்டும்; அந்த குரலை கேட்க வேண்டும்; அந்த இசையை ரசிக்க வேண்டும் என்று ஆசை.

தொகுத்து வழங்கிய அருமைச் சகோதரி தமிழரசி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என்ற பாடலை பாடப் பாட ஒவ்வொரு முறையும் ஒரு சுதி ஒரு ராகம் ஒரு பாணி. வார்த்தை ஒன்றுதான்; சொல் ஒன்றுதான் - பாணி. இசை தன்னையும் அறியாமல் தன் விரல் நாட்டியம் ஆடியதை கண்டீர்களா? அனைவரும். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் எட்டு தொணியில் எட்டு இசையில் அப்பேற்பட்ட ராகத்தோடு பாடும் ஆற்றல் ஒரு குரல் வேண்டும். அதை எழுதுவதற்கு விரல் வேண்டும். மீண்டும் அதை பாடிப் பாடி நம்மை ரசிக்க செய்தார்கள் என்று சொன்னால், ஒரு மன்றத்திற்கு என்று தனி பாடலையும் பாட வைத்து, எல்லோருடைய விரலையும் நாட்டியம் ஆட வைத்த சக்தி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு மட்டுமே. அதை எழுதிய வரிகளுக்கு சொந்தக்காரார் இவர். பாடிய பெருமை இவருக்கு.

“நீராருங் கடலுடுத்த நில மடந்தைக் கெழிலொழுகும்” தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல். கன்னட இசை, கர்நாடக இசை, ஆங்கில இசை, காது கொடுத்து கேட்க முடியாத இசை அரசு விழாக்களில் இருந்தது. ஒரு நிகழ்ச்சியின் தொடக்கம் என்றால், அதற்கு ஒரு அலங்கார தோற்றம் தேவை; முகப்பு தேவை; தோரணம் தேவை; துவக்கம் தேவை. கலைஞர் வருவதற்கு முன்பு தமிழ் உலகில் இருந்ததா? கண்ட கண்ட இசை; கண்ட கண்ட மாதிரி. ஆனால் முத்தமிழர் மூதறிஞர் தமிழாய் வாழுகிற தாயுள்ளம் படைத்த கலைஞர்தான் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் “நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்” என்ற பாடலை யாத்துத் தந்தார். எந்த மாநிலத்துக்காரார் கவர்னராக தமிழகத்திற்கு வந்தாலும், தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடுகிறபோது, எழுந்து நின்று தலை வணங்குகிறார் என்று சொன்னால், அது தமிழ்த்தாய் வாழ்த்துக்கு ஒரு பக்கம் யாத்துத் தந்தார்; அதை யாத்துத் தந்த டாக்டர் கலைஞருக்கு தலை வணங்குகிறார் என்ற பொருள்தான். அந்த அடையாளம் தான்; அந்த யுக்திதான்; அந்த பாணி தான், அவர் தங்கையாக இருக்கும் அம்மையார் விஜயா தாயன்பன் அவர்களுக்கு வந்தது. அதனால்தான் தன் மன்றத்திற்கென்று ஒரு தனி பாடல். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஆற்றுகிற பணியை பார்; பொற்கிழி தந்தோம் பார்; லட்சம் ரூபாய் கொடுத்தோம் பார்; நிவாரணம் வழங்குகிறோம் பார்; ஆடை வழங்க 10,000 அள்ளித் தருகிற முதல்வர் யார்? என்ற கேள்வியை கேட்டுக் கேட்டு ஒரு தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுக்குரிய ஈர்ப்பு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற பாடலுக்கு கொண்டு வந்த பெருமை விஜயா தாயன்பனுக்கு உண்டு என்பதை மனதார பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். அந்த அளவிற்கு ஈர்த்துப் போனோம்.


### கலைஞர் எனும் மகான்!

1955ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1973ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத் தலைவர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என்று பெயர் மாற்றம் பெற்றது. அந்த மகான் 1973ல் தொடங்கி வைத்த அந்த தொடர்ச்சி, 2024இலும் தொடர்கிறது. 2024 அல்ல, 2224 இலும் இந்த தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பணி தொடரும். அதற்கு ஆற்றுகிற பணி நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகை 3,000, ஆயிரக்கணக்கானோருக்கு அள்ளி வழங்குகிறார் முதலமைச்சர் என்று சொன்னாரே… அந்த மனபலம் வேறு எந்த தலைவருக்கு வரும்? எந்த ஆட்சிக்கு வரும்? எந்த முதல்வருக்கு வரும்?

பொதுவாக அனைவரையும் கட்டிப் போடுவது இசைதான். இசைதான் அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கும்; நெஞ்சுருக வைக்கும். அந்த இசையை வென்றவர் யாரோ, அவர் தான் அனைவரையும் வெல்வார்கள். அந்த வெல்லுகிற சக்தி ஒரு தலைவருக்கு இருந்தது என்றால், அது கலைஞர் அவர்களுக்கு மட்டும்தான் உண்டு. அதனால்தான் உலகத்தில் இருக்கிற அனைத்து தமிழர்களையும் கட்டி ஆண்டார். அந்த உதிரம் ரத்தம் இன்றைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது.

### முதல்வரின் போர்க்குணம்!

இந்தியாவில் இருக்கும் டாப் 20 ஆளுமை மிக்க தலைவர்கள் பட்டியலை நேற்றைய தினம் இந்தியா டுடே பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. அந்த 20 ஆளுமைமிக்க இந்தியத் தலைவர்களில் 8வது இடத்தில் இருக்கும் ஒப்பற்ற தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தன்னிகரில்லா தலைவர் அன்புத் தலைவர் தளபதி அவர்கள்.



அந்த ஆளுமை - பெர்சனாலிட்டி மக்களுக்கு உழைக்கும் எண்ணம் கலைஞர்போல் ஒரு வாகை சூடுகிற மனம் போர்க்குணம் - ஆற்றல் யாருக்கு தலை வணங்காத தன்மை.

இன்றைக்கும்கூட “நீராருங் கடலுடுத்த” பாடலை இழிவுபடுத்திய நேரத்தில் நம் முதலமைச்சர் துடித்தெழுந்து சட்டம் போட்டார். இனி எவராக இருந்தாலும் பாடல் பாடுகிறபோது எழுந்து நிற்க வேண்டும், இல்லை என்றால் அது சட்டப்படி குற்றம், தண்டனைக்குரியது என்று சட்டம் தந்தார். தமிழைக் காக்க இந்தக் காலத்திலும்.

எனவே, இப்படி கட்டிக்காக்கப்பட்ட தமிழ் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் - திராவிடக் கலைகளை, பண்பாடுகளை வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் அருமைச் சகோதரர் ராமானுஜம் போன்றவர்கள், அண்ணன் நம்முடைய தாயன்பன் போன்றவர்கள், அம்மையார் போன்றவர்கள் தொடர்ந்து இந்தப் பணியை பெரும் பணியாக நீங்கள் செய்கிற பணிக்கெல்லாம் முத்தமி ழறிஞர் மூதறிஞர் கலைஞரின் ஆசி என்றென்றும் உங்களுக்கு கிட்டும்.

இந்த இயல் இசை நாடக மன்றத்தின் வளர்ச்சி பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. கலைஞர்களின் கலைச் சேவைக்காக மாநில அளவில் ‘கலைமாமணி விருது’ வழங்குவதற்கான அமைப்பு நம்முடைய மன்றம். அது நிறுத்த ப்பட்டது, விரைவில் வழங்கப்படும். தமிழ்நாடு முதலமைச்சர் வழங்க இருக்கிறார் என்ற உத்தரவாதத்தை நம்முடைய அம்மையார் விஜயா தாயன்பன் அவர்கள் வழங்கினார் என்று சொன்னால், இப்பேற்பட்ட அந்த கலைமாமணி என்ற ஒரு அங்கீகாரம் நமக்கு கிடைக்கும் என்பதில் நமக்கு இருக்கும் பெருமிதம். எத்தனை பேர் எத்தனை ஆட்சியில் தந்தார்கள், அதை துவக்கித் தந்த தலைவர் நம்முடைய முதலமைச்சர் கலைஞராக இருந்தபோதுதானே

### தன்மானத்தோடு தலைநிமிர்கிறோம்!

அகில இந்திய அளவில் இலக்கியத்திற்கான ‘பாரதி விருது’, இசைக்கான ‘எம்.எஸ்.சுப்புலட்சுமி விருது’, நடனத்திற்கான ‘பால சரஸ்வதி விருது’. இயல் இசை நாடகம் அந்த மூன்றிற்கும் விருது அறிவித்த தலைவர் கலைஞர். வேறு யாரிடம் கேட்க முடியும்.

தாயாக இருந்து வளர்த்த தலைவர் கலைஞர். அவரே நெஞ்சுக்கு நீதி எழுதுவார். “நான் சிறு பிள்ளையாக இருந்தபோது என்னுடைய பெற்றோர்கள் இசைப் பயிற்சிக்கு அனுப்பி வைத்தார்கள். நான் இசைப் பயிற்சிக்கு சென்றபோது இசை வித்வான்கள் சாலையில் நின்ற காட்சியை பார்த்து நான் மனம் வெந்து போனேன். ஆற்றல்மிக்க இசை மாமேதைகள், இசையை ஆளுபவர்கள் தோளில் போடுகிற துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு நின்ற காட்சி என் சுயமரி யாதைக்கு, என் பிறப்புக்கு அதை குறைவாக கருதினேன். மனம் நொந்து போனேன். மறுநாள் பயிற்சிக்கு செல்கின்றபோது, நான் மறுத்தேன். எனவே சுயமரியா தைக்கு இடர்பாடு வந்தபோது, துணிந்து நின்று போராடிய அதே தலைவர் முதல்வர் கலைஞர்தான், இடுப்பில் கட்டிய துண்டை எடுத்து தோளில் போட்டுக்கொள். நீ மனிதன் என்று நமக்கு பெருமை சேர்க்கும் காரியத்தை செய்த தலைவரும் அந்த தலைவர்தான்” முதல்வர் ஆனவுடன் இசையை வளர்க்க தமிழ்நாடு சங்கீத நாடக மன்றம் என்பதை இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழ் கலைகளை அங்கீகரிக்கும் வகையில் 1973ல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என பெயர் மாற்றம் செய்து இந்த அமைப்பின் மூலம் இயல், இசை, நாடக வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் வகுத்து செயல்படுத்தியவர் கலைஞர் இன்றைக்கு நம்முடைய ஆளுமைமிக்க கலைமாமணிகள் கலைஞர் பெயரை சொல்கிறோம். தன்மானத்தோடு தலை நிமிர்கிறோம்.

### கலைஞரின் தொண்டன்நான்!

இந்த எளியவன் நரசிங்கம்பேட்டையில் புவிசார் குறியீடு பெற்றதற்கு நூறு கலைஞர்களை வைத்து இசை நிகழ்ச்சி நடத்தி நன்றி சொன்னேன் என்று அண்ணன் இராமானுஜன் சொன்னாரே, அதற்கு முன்பு அவருக்கும் எனக்கும் பழக்கம் கிடையாது. அந்த விழாதான் அண்ணனையும் என்னையும் தொடர்பு படுத்தியது. அந்த விழாவிற்கு வந்துதான் என் செயலைப் பார்த்து சொன்னார். நான் சொன்னேன், “இது என் மண்ணில் பிறந்தது. என் தொகுதியில் இருப்பது. எனக்கும், என் தாய், தந்தையருக்கும் இசை குடும்பம் வேண்டுமானால் தொடர்பில்லாமல் இருக்கலாம்; இசை தெரியாதவனாக இருக்கலாம்; கேட்கிற சக்தி மட்டும் எனக்கு இருக்கலாம். ஆனால் உலகத்தில் இருக்கும் யாராக இருந்தாலும் இசைக்கு கட்டுப்படாதவன் எவனும் இல்லை. அப்பேற்பட்ட நாதஸ்வரம் உருவாக்குகிற ஊர் இந்த நரசிங்கம்பேட்டை. அதற்கு புவிசார் குறியீடு என்றால் அதை நான் பெருமை சேர்க்கிறேன் என்று சொல்லி இந்திய அளவில் அதற்கான அஞ்சல் தலை வெளியீட்டு விழாவும் நடத்திய தொண்டன் உங்கள் முன்னால் நிற்கிற கலைஞரின் தொண்டன், இந்த கோவி செழியன். அன்றைக்கு இந்திய தபால் துறை வந்து வெளியிட்டது.

எனவே இப்படி பார்த்துப் பார்த்து ஒரு இனத்தை மொழியை கலையை கலாச்சாரத்தை பண்பாட்டை பாதுகாக்கும் சக்தி நம்முடைய தலைவர்களுக்கு மட்டும்தான் உண்டு. அதன் அடிப்படையில்தான் நம்முடைய அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அம்மையார் சொன்னதைப்போல, மாதந்தோறும் 3,000 ரூபாய் கலைஞர்களுக்கு, கலைமாமணி பெற்று, தற்போது நலிந்த நிலையில் வாழும் 10 கலைஞர்களுக்கு தலா ஒரு லட்சத்திற்கான பொற்கிழி, 500 நாட்டுப்புற கலைஞர்களுக்கு 10,000 ரூபாய் வீதம் ரூபாய் 50 லட்சத்திற்கான இசைக்கருவிகள் மற்றும் ஆடை ஆவணங்கள் வழங்குவதற்கான நிதி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு நாட்டுப்புற கலைஞர்கள் நல வாரியத்தின் சார்பில் 941 நாட்டுப்புற கலைஞர்களுக்கு 50 லட்சம் மதிப்பீட்டில் நல உதவிகள் வழங்கப்பட்டது. அமெரிக்க தமிழ்ச் சங்கத்தில் 27.50 லட்சம் ரூபாய் செலவில் 11 கலைஞர்களை வெளிநாடுகளுக்குச் அழைத்துச் சென்று கலையை வளர்ப்பதற்கான பெருமுயற்சி எடுத்து, நம்முடைய முதல்வர் அனுமதித்து கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, 202324ஆம் ஆண்டில் நம்முடைய இயல் இசை நாடக மன்றத்தில் உள்ள முத்தமி ழறிஞர் கலைஞர் நினைவரங்கத்தில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட காட்சி எல்லாம் நம்முடைய தளபதி ஆட்சியில் நம் மன்றம் அடைந்து வரும் தொடர் சாதனைகள்.

எனவே, அந்த வகையில் மிக அருமையாக மிக எழுச்சியாக இந்த மன்றம் நடக்கிறது. அதனால் தான் நம்முடைய மாவீரன் மரியா தைக்குரிய அண்ணன் மயிலை த.வேலு அவர்கள் பேசுகிறபோது சொன்னார், “மக்கள் தொண்டர் மயிலை தொகுதியில் இந்த அரங்கம் கிடைத் திருப்பது எனக்கு பெருமை. இன்னும் பல சேவைகளைச் செய்ய காத்திருக்கிறேன்” என்ற கருத்தை இங்கே குறிப்பிட்டு சொன்னார்.

அந்த வகையில் அன்புத் தலைவர் கலைஞர் பெயரால் உருவாக்கப்பட்ட அமைப்பால் அந்தத் தொடர் நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிற தருணத்தில்தான் ஏழு தினங்களும் அனைத்து நிகழ்ச்சி களிலும் கலந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருந்த சூழலில் முதல் நிகழ்ச்சியை துவக்கி வைத்துவிட்டு நாளைய தினம் இதே நேரத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் நான் சார்ந்திருக்கிற தஞ்சை மாவட்டத்திற்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு வருகிறார். அவர் துணை முதலமைச்சர்ஆகி தஞ்சை மாவட்டத்திற்கு வருகிற முதல் நிகழ்ச்சி. நான் அமைச்சராக பொறுப்பேற்று அவரை வரவேற்கிற முதல் நிகழ்ச்சி. இவ்வளவு நிகழ்வுகள் அங்கே இருக்கிற நேரத்தில்தான் முதல் நாளே வந்து விடை பெற்று செல்கிறேன். அடுத்தடுத்த நாட்கள் அதற்கான சூழல் இல்லை.

எனவே அனைவருக்கும் ஆளுமையுடைய நம்முடைய அன்புத் தலைவர் கலைஞரின் ஆற்றல் அறிவு உலகம் பாராட்டுகிறது. நம்மைப் பார்த்து நம் இசையைப் பார்த்து நம் குடும்பத்தைப் பார்த்து நம் தலைமுறையைப் பார்த்து ஒருவர் மகிழ்விக்கிறார், பெருமை சேர்க்கிறார் என்று சொன்னால், நமக்கு இருக்கும் பெருமை எல்லாம்கூட, நமக்கு இருக்கும் அடையாளம் மாறும் என்றால் கலைஞர் என்ற அந்த கம்பீர தலைவர் தான். அதை அனைவரும் உணர்வார்கள், அறிவார்கள். இசையை வளர்ப்பதற்கு, நம்முடைய தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வளர்ப்பதற்கு அவர்தான் நம்முடைய அடையாளம்.

கலைஞரின் சட்டமன்ற குறிப்புகளை படித்தபோது, அவர் பேசிய பேச்சுக்கள் எழுத்துக்கள் - நாட்டியத்தின் மீது காட்டிய அக்கறை இவைகளெல்லாம் மெய் மறந்து பலமுறை நாங்கள் பேசியிருக்கிறோம். அவருடைய ஆற்றல் அறிவை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி நான் என் உரையை நிறைவு செய்ய வேண்டுமேயானால், அன்புத் தலைவர் கலைஞர் கலந்து கொள்ளாத போராட்டம் தமிழ்நாட்டில் எதுவுமில்லை. போராட்டம் என்றால் கலைஞர், கலைஞர் என்றால் போராட்டம். அவரோடு அடிக்கடி சிறை சென்ற பெண் வீராங்க னையாக விளங்கியவர்தான் அருமைச் சகோதரியார் அம்மையார் விஜயா தாயன்பன் அவர்கள். கழகத்திற்காக கழகத்தின் வளர்ச்சிக்காக.

### பச்சையப்பன் கல்லூரியில் கலைஞர் உரை!

அன்புத் தலைவர் கலைஞர் 15 நாட்கள் சிறையில் இருந்து விட்டு சட்டப்பேரவைக்கு வருகிறார். கலைஞர் வருவதை பார்த்துவிட்டு, எதிர்க்கட்சி இயக்கத்தைச் சார்ந்தவர்கள் தேசிய கட்சி, காங்கிரஸ் பேரியக்கம் இன்றைக்கு கூட்டணியில் இருக்கலாம். அன்றைக்கு தலைசிறந்த ஒரு நாடாளுமன்றவாதியாக சட்டமன்றவாதியாக ஆற்றல்மிக்க இலக்கியப் பேச்சாளராக இருந்த மரியதைக்குரிய டி. என்.அனந்தநாயகி அம்மையார். சட்டமன்ற குறிப்புப்படி, கலைஞர் சட்டப்பேரவைக்கு உள்ளே வருகிறார். அனந்தநாயகி அம்மையார் சொன்னாராம், “என்ன கலைஞரே… மாமியார் வீடு எப்படி இருந்தது?” என்று கேட்டாராம். மாமியார் வீடு என்று சொன்னால், கலைஞர் சென்றுவந்த சிறைச்சாலை. அடுத்த வினாடி கலைஞர் சொன்னாராம், “உங்கள் தாயார் வீடு, எனக்கு சௌகரியமாகத்தான் இருந்தது”என்றார் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

பச்சையப்பன் கல்லூரியில் விழாவாம். மிசா காலகட்டம். அரசியல் பேசக்கூடாது. கல்லூரி முதல்வர் உத்தரவு. மூன்று பேர் பேசுகிறார்கள். அதில் ஒருவர் குமரி அனந்தன். இலக்கியச் செம்மல் என்று புகழ்பெற்றவர். குமரி அனந்தன் இலக்கிய மாமேதை. மற்றும் ஒருவர் பேசுகிறார். வார்த்தைச் சித்தர் வலம்புரி ஜான். வலம்புரி ஜான் வார்த்தை போட்டால் திராவக வார்த்தையாக இருக்கும். அதனால் தான் அவருக்கு வார்த்தைச் சித்தர். அண்ணன் குமரி அனந்தன் இலக்கியச் செல்வர். முத்தமிழறிஞர் கலைஞர் மூன்று பேர் பேசுகிற வாய்ப்பு. வரவேற்புரை ஆற்றும்போது கல்லூரி முதல்வர் சொன்னார், மூவரும் அரசியல் பேசக்கூடாது தயவு செய்து.

குமரி அனந்தன் பேசினார், அற்புதமாக பேசினார். அரை மணி நேரம் பலத்த கரவொலி. கைதட்டல் பெற்றார். உட்கார்ந்தார். வலம்புரி ஜான் பேசினார். அரை மணி நேரம் பலத்த கரவொலி. கைதட்டல், பாராட்டு உட்கார்ந்தார்.

### கலைஞரின் அரசியல் சித்து விளையாட்டு!

அடுத்து கலைஞர் பேசுகிற வாய்ப்பு. அரை மணி நேரம்தான் பேச வேண்டும். 30 நிமிடம். 27 நிமிடம் பேசிக் கொண்டே வந்து, கடைசி 3 நிமிடத்தில் கலைஞர் சொன்னார், “கல்லூரி முதல்வர் அரசியல் பேசக்கூடாது என்று சொன்னார். குமரி அனந்தனையும், வலம்புரி ஜானையும், என்னையும் உட்கார வைத்துவிட்டு, நாங்கள் மூன்று பேரும் அரசியல்வாதிகள்தான். தெரிந்தும் சொன்னார், அரசியல் பேசக்கூடாது என்று. நான் அவருக்காகவும் சொல்வேன், உங்க ளுக்காகவும் சொல்வேன். கல்லூரி முதல்வர் வேண்டுகோள் வைக்கும்போது, ஒன்றைச் சொன்னார். நிகழ்ச்சி முடிந்தவுடன் அனைவரும் சாப்பிட்டுவிட்டு போங்கள் என்று. இங்கு வருகை தந்திருக்கும் அனைவரும் நன்றாக சாப்பிட்டுவிட்டு இலையை குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு, கையை நன்றாக கழுவிவிட்டு வெளியே செல்லுங்கள். இது என் அன்பான வேண்டுகோள்” என்று கலைஞர் பேசினார். அவர் சொன்னதன் சூசகம் என்ன தெரியுமா? இலை என்பது ஒரு சின்னம். கை என்பது ஒரு சின்னம். மூன்றும் கலந்த அரசியல் சித்து விளையாட்டை மாணாக்கர்கள் மத்தியில் மாணவர்கள் மத்தியில் பச்சையப்பன் கல்லூரியில் விளையாடியவர் அவர்.

எனவே, இசைதான் ஆள முடியும் என்பதற்கு சான்று. அவர்தான் ஆளுமைத் திறன் பெற்றவராக இருப்பார். கோவி செழியன் பேசுகிறான் என்றால், அவனுக்கு இருந்தது கலைஞர் கற்றுத் தந்த தமிழ். அம்மையார் விஜயா தாயன்பன் அந்தக் குரல் அசைவோடு பாடுகிறார் என்றால், கலைஞர் கற்றுத் தந்த தமிழ். என் அண்ணன் தாயன்பன் அவர்கள் இப்பேர்பட்ட அருமையான பாடல் எழுதுகிறார் என்று சொன்னால், கலைஞர் கற்றுத் தந்த தமிழ்.

எனவே, அனைத்து நிலையிலும் இசை வெல்லும்; தமிழ் வாழும். இதற்கு மாபெரும் சக்தியாக இருந்த கலைஞர் புகழ் நீடுழி வாழ்க… வாழ்க என்று சொல்லி அனைத்திற்கும் துணை நிற்கும் முதலமைச்சருக்கும், துணை முதலமைச்சருக்கு நன்றி சொல்லி துவக்க உரையை நிகழ்த்தி என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கோவி. செழியன் பேசினார்.

---

## கழகக் கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

# கம்பம் இரா.பாண்டியன் சகோதரி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

*கம்பம், நவ. 8-*

*கழக கொள்கை பரப்பு மாநில துணைச் செயலாளர் கம்பம் இரா. பாண்டியனின் சகோதரி எம்.பரமேஸ்வரி நேற்று முன்தினம் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*இச்செய்தியறிந்ததும் கழகத் தோழர்கள் அன்னாரது இல்லம் சென்று மறைந்த பரமேஸ்வரி அவர்களுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.*

*மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கம்பம் இரா.பாண்டியனின் சகோதரி எம்.பரமேஸ்வரி நேற்று முன்தினம் (06-11-2024 - புதன்கிழமை) காலை 9.00 மணி அளவில் தேனி மாவட்டம் கம்பத்தில் காலமானார்.*


*தகவல் அறிந்ததும் தேனி மாவட்டம் தெற்கு, வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் மலரஞ்சலி செலுத்தினர்.*

*அன்னாரது நல்லடக்கம் நேற்று (07-11-2024 வியாழன்) பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வே. ரூசோ
### நவம்பர் 8 (1998)



**தனது பள்ளிப் பருவம் முதல் கழகப் பணிகளில் ஈடுபட்டு வந்தவர்.**

**சிவகங்கை மாவட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளராகவும் – மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணை தலைவராகவும் பணியாற்றியவர்.**

**இளைஞர்களின் அன்பையும் – மக்களின் நம்பிக்கையையும் பெற்று கழகத் தலைமையின் கனிவான ஆதரவைப் பெற்று, மாவட்டத்து முன்னணியினரின் பாசத்திற்குரிய பண்பாளராக வளர்ந்தவர்.**

**“கண்ணிலேயே நிற்கும் கண்மணி” என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**